1995 நவம்பர் 3]

வாரியக் குடியிருப்புகளில் இருக்கின்ற பயனாளிகள் தவணை முறைத் திட்டத்திற்கு ஒப்புதல் தந்தவுடன் அங்கேயும் பணிகள் துவங்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 12, திரு. ஆர். சிங்காரம், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

12—

தமிழகத்தில் கரும்பு விலையை நிர்ணயித்தல்

*61824—**திரு. ஆர். சிங்காரம்:**

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் கரும்பு விலை டன் ஒன்றுக்கு ரூ.800/–விலை நிர்ணயிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கரும்புக்கு குறைந்தபட்ச அடிப்படை விலையை நிர்ணயம் செய்வது மத்திய அரசின் பொறுப்பாகும். எனவே, டன் ஒன்றுக்கு 800 ரூபாய் குறைந்தபட்ச அடிப்படை விலையை மத்திய அரசு அறிவிக்குமானால், அதைத் தமிழக அரசு மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொண்டு, கரும்பு பயிரிடும் விவசாயிகளுக்கு ஆதரவு அளிக்கும்.

முற்பகல் 10–50

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் முதலமைச்சராக டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சி ஏற்ற பிறகு, அவர்கள் ஆட்சிக்கு வந்தபோது, சுமார் 250 ரூபாய் ஒரு டன்னுக்கு இருந்த விலை சென்ற ஆண்டு மட்டும் திடீரென்று ஸ்பெசல் பிரைசாக 106 ரூபாயை கூடுதலாக்கி இந்த அரசு நிர்ணயித்து உத்தரவிட்டது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவார்கள். அப்படிக் கரும்பு விவசாயிகளுக்கு ஆக்கமும் ஊக்கமும் தந்து கொண்டிருக்கிற இந்த அரசு தற்போது கரும்பு விவசாயிகள், விலைவாசி ஏறிவிட்ட காரணத்தாலும், வெட்டுக்கூலி ஒரு டன்னுக்கு சுமார் 200 ரூபாய் என்று ஆகிவிட்ட காரணத்தாலும், லிப்டிங் லேபர் ஒரு டன்னுக்கு 3 பேர் என்ற படி 75 ரூபாய் ஆகிறது என்றும், மாமூல் ரூபாய்

8 முதல் 10 என்ற கணக்குப்படி 200 ரூபாய் ஆகிறது என்றும் லாரி வாடகை 8 முதல் 10 டன் கொண்டது, ஒரு டன்னுக்கு 40 ரூபாய் ஆகிறது என்றும் மற்றும் பொட்டாஷ், யூரியா, லேபர் போன்றவை விலை ஏறிவிட்ட காரணத்தாலும்—புரட்சிகரமாக தமிழகத்தை ஆட்சி செய்து கொண்டிருக்கிற தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி ஆட்சிக் காலத்தில், எங்கும் புரட்சி எதிலும் புரட்சி என்று ஆட்சி செய்துக் கொண்டிருக்கிற வேளையில், இன்னும் சொல்லப்போனால் சமீபத்திலே சிதம்பரத்திலே, 1100 ஏழைகளுக்கு இலவசமாக திருமணம் செய்து (மேசையைத் தட்டும் ஒலி), ஒரு ஏழைக்கு 25 ஆயிரம் ரூபாய் என்ற அடிப்படையிலே பல கோடி ரூபாய்களை கட்சிப் பணத்திலிருந்து செலவு செய்து அந்த ஏழை எளிய மக்களுக்கு திருமணம் செய்து வைத்து தமிழகத்தில் மட்டும் அல்ல, இந்தியாவில் மட்டும் அல்ல, ஏன் உலகத்திலேயே எந்த ஒரு தலைவரும் செய்யாத (மேசையைத் தட்டும் ஒலி) வகையில் செய்து, ஏழைகளுக்கு வாழ்வு அளிக்கின்ற திருமணத்தை செய்து காட்டிய புரட்சித் தலைவி ஆட்சிக் காலத்தில்--எதையும் எப்படியும் செய்ய முடியும் என்று தனி தைரியத்தோடு செயல்படுகிற புரட்சித் தலைவி ஆட்சி காலத்தில் இதையும் கரும்பு விவசாயிகளுக்கு செய்து கொடுக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு மத்திய அரசு அறிவித்த அடிப்படை விலை 391 ரூபாய். அது விவசாயிகளுக்கு கட்டுப்படியாகாத ஒன்று என்பதைக் கருத்தில் கொண்டு மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் 134 ரூபாய் அரசினுடைய பரிந்துரை விலையாக அறிவித்து 8.5 சதவீத சர்க்கரை சத்துக்கு 525 ரூபாய் கொடுப்பதற்கு ஆவண புரிந்தார்கள். நடப்பு ஆண்டுக்கு 1995-96 ஆம் ஆண்டுக்கு, குறைந்த விலையை நிர்ணயம் செய்வதற்கு நாளைக்கு முத்தரப்பு மாநாடு சென்னையிலே கூட இருக்கிறது. அதிலே விவசாயிகளுடைய கருத்துக்களை ஏற்று அதற்குரிய நடவடிக்கையை மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் எடுப்பார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாளை கூட இருக்கிற முத்தரப்பு மாநாட்டிலே இது குறித்து தமிழக அரசின் சார்பாக கலந்து கொண்டு நிச்சயமாக விவசாயிகளுக்கு நல்ல ஒரு செய்தியை அமைச்சர் அவர்கள் கொடுப்பார்கள் என்று கருதுகிறேன். அதே நேரத்திலே தற்போது கரும்புக்கு ஸ்டேச்சுடரி பிரைஸ் அல்லது

1995 நவம்பர் 3]

அட்வைசரி பிரைஸ் என்று வழங்கப்படுகிறது. அதை மாற்றி தமிழ்நாடு ஷுகர் கேன் பிரைஸ் என்று வழங்கினால் நிச்சயமாக அந்த விவசாயிகள் மகிழ்ச்சி அடைவார்கள் என்று கருதுகிறேன். அத்தோடு 1934-ல் வெள்ளைக்காரன் ஆட்சியில் ஷுகர் ரெக்கவரி 8.5 பெர் டன் என்கிற பிளாட் ரேட் முறை ரத்து செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரும்புக்கு அடிப்படை விலையை நிர்ணயம் செய்யக் கூடிய அதிகாரம் மைய அரசினுடைய கையிலேதான் இருக்கிறது என்று நான் ஏற்கெனவே குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறேன். அந்த அதிகாரம் மாநில அரசுகளுக்கு பகிர்ந்து அளிக்கப்படவில்லை, மைய அரசு அறிவிக்கக் கூடிய விலை குறைகிறது, எனவே விவசாயிகளுக்கு அவர்களுடைய செலவினங்களுக்கு உரிய லாபகரமான தொழிலாக அது அமைய வேண்டும் என்பதற்காகத்தான் மாநில அரசு பரிந்துரை விலையை அறிவிக்கிறது. அதேபோல 8.5 சதவீதம் சர்க்கரை சத்து கொண்ட கரும்புக்கு மத்திய அரசு தான், அதற்குரிய விதி முறைகளை வகுத்திருக்கிறது. எனவே, அதை ரத்து செய்வதற்கு இயலாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மைய அரசு தன்னுடைய அதிகாரத்தை மாநில அரசுக்கு பகிர்ந்து அளிக்கும் என்று சொன்னால் மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 13, திரு. வி.கே. சின்னசாமி, மாண்புமிகு வணிக வரிகள்துறை அமைச்சர்.

13—

பூவிருந்தவல்லி சோதனைச் சாவடி சாலையில் போக்குவரத்து நெரிசலைத் தவிர்த்தல்

35147*—திரு. வி.கே. சின்னசாமி:**

மாண்புமிகு வணிகவரிகள்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூவிருந்தவல்லி சோதனைச் சாவடிகளில் சாலை இரு மருங்கிலும் வாகனங்களை நிறுத்தி சோதனை செய்யப்படுவதால், பேருந்துகள் மற்றும் இதர வாகனங்கள் நீண்ட நேரம் காத்திருக்க வேண்டிய நிலை உள்ளதை அரசு அறியுமா?